# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATION IN BACHELOR OF ARTS (EXTERNAL) - 2009 / 2010
## HELD IN DECEMBER - 2010

## TML 3.12 – PRESCRIBED TEXTS - II

**முதலாம் வினா உட்பட ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. கீழ்வருவனவற்றுள் எவையேனும் இரண்டின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி, அடிக்கோடிட்ட தொடர்களில் நீர்காணும் நயத்தினையும் விளக்குக.

அ) முலைமுகஞ் செய்தன முள்ளெயி றிலங்கின
தலைமுடி சான்ற தண்தழை யுடையை
அலமரல் ஆயமொ டியாங்கணும் படாஅல்
மூப்புடை முதுபதி தாக்கணங் குடைய
காப்பும் பூண்டிசின் கடையும் போகலை
பேதை அல்லை மேதையங் குறுமகள்
பெதும்பைப் பருவத் தொதுங்கினை புறத்தெனப்
ஒண்சுடர் நல்லில் அருங்கடி நீவித்
தன்சிதை வறிதல் அஞ்சி இன்சிலை
ஏறுடை இனத்த நாறுயிர் நவ்வி
வலைகாண் பினையிற் போகி ஈங்கோர்
தொலைவில் வெள்வேல் விடலையொ டென்மகள்
இச்சுரம் படர்தந் தோளே ஆயிடை
அத்தக் கள்வர் ஆதொழு அறுத்தெனப்
பிற்படு பூசலின் வழிவழி யோடி
மெய்த்தலைப் படுதல் செய்யேன் இத்தலை
நின்னொடு வினவல் கேளாய் பொன்னொடு
புலிப்பல் கோத்த புலம்புமணித் தாலி
ஒலிக்குழைச் செயலை உடைமாண் அல்குல்
ஆய்சுளைப் பலவின் மேய்கலை உதிர்த்த
துய்த்தலை வெண்காழ் பெறூஉங்
கற்கெழு சிறுகுடிக் கானவன் மகளே.

ஆ) வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்
களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான் !
போர்அடு திருவின் பொலந்தார் அஞ்சி !
பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே ! தொல்நிலைப்
பெருமலை விடரகத்து அருமிசை கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கி
சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே